**சாட்சியின் வாக்குமூலம்**

பாகம் 111 சுற்றிக்கை உத்தரவு 11 உ.வி.மு.ச.பிரிவு - 1 மற்றும் உ.வி.மு.ச

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**

**அசல் வழக்கு எண்.95/2018**

**வா.சா.1**

| | | |
|---|---|---|
| சாட்சியின் பெயர் | : | தங்கவேல் |
| தகப்பனார் பெயர் | : | ஆண்டியப்பபிள்ளை |
| வயது | : | 71/2024 |
| தொழில் | : | |
| மதம் | : | |
| ஜாதி | : | |
| கிராமம் | : | அய்யலூர் |
| தாலுகா | : | வேடசந்தூர் |
| மாவட்டம் | : | திண்டுக்கல் |

1873ன் வருடத்திய வகைமுறை சட்டம் பிரிவு 10ன் படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி வரை செய்யப்பட்டு 04.09.2024 ம் தேதி என்னால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

தாவா சர்வே எண்.1562/3B ஆனது சர்வே எண்.1562/6க்கு வடபுறத்தில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.1562/3Bல் தான் மோல்டு வீடு கட்டி, மின் இணைப்பு பெற்று வசித்து வருகிறேன் என்றால் சரிதான். சர்வே எண்.1562/5 நிலமானது சர்வே எண்.1562/6க்கு மேல்புறம் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.1562/5ல் எப்பொழுதும் கிணறு கிடையாது என்றால் சரிதான். சர்வே எண்.1562/5 மற்றும் சர்வே எண்.1562/3B என்பதற்குரிய நிலங்களை பிரதிவாதி மற்றும் அவருடைய வகையறாக்களிடமிருந்து கிரையம் பெறவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் ஆதியில் வெள்ளையபிள்ளை குமாரர்கள் ராஜுப்பிள்ளை வகையறாவிற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் ராஜுப்பிள்ளை வகையறாவிடமிருந்து நைனான்குளத்துப்பட்டியில் இருக்கும் கருப்பன் அம்பலம் மனைவி செம்பாயி அம்மாள் வா.சா.ஆ.1 ஆவணமாக 19.09.1938ம் தேதியில் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண்.1562/5, சர்வே

எண்.1562/3B யைத்தவிர வேறு சொத்துக்கள் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணமான கிரைய ஆவணத்தில் செம்பாயி அம்மாள் வா.சா.ஆ.1 ல் உள்ள படி கருப்பபிள்ளைக்கு 25.08.1942 ல் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். கருப்பபிள்ளையிடம் இருந்து வா.சா.ஆ.2 ல் கண்ட சொத்துக்களை நான் நேரடியாக கிரையம் பெறவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணமான கிரைய ஆவணத்தை பொன்ராம்பிள்ளை மருமகள் கண்ணம்மா மற்றும் லதா, வேணி ஆகியோரிடம் கிரையம் பெற்றேன். வா.சா.ஆ.3 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள என்னுடைய கிரையதாரர்களான கண்ணம்மா, லதா மற்றும் வேணி ஆகியோருக்கு தாவா சொத்துக்கள் எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதற்கான மூல ஆவணங்கள், அது தொடர்பான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.1562/7 க்குரிய நிலங்கள் எனக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.1562/5 மற்றும் பிரதிவாதி மற்றும் அவருடைய வகையறாவிற்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.1562/6 நிலங்களுக்கு தென்புறத்தில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.1562/7 க்கு மேல்புறம் சர்வே எண்.1562/4 ல் எனது மகன்களுக்கு கிரையப்படி பாத்தியப்பட்ட நிலங்கள் உள்ளது என்று சொன்னால் சரிதான். சர்வே எண்.1562/5, சர்வே எண்.1562/6 நிலங்களுக்குதென்புறம் உள்ள சர்வே எண்.1562/7 ஆனது சுமார் 2 1/2 அடி பள்ளத்தில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.1562/6 ல் பிரதிவாதி வகையறா ஆழ்துளைக்கிணற்றில் மின் மோட்டார், மின் இணைப்பு பெற்றுள்ளார் என்றால் சரிதான். சர்வே எண்.1562/6 ல் உள்ள ஆழ்துளைக்கிணற்றில் இருந்து தான் சர்வே எண்.1562/7 நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சி விவசாயம் செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.1562/3B மற்றும் சர்வே எண்.1562/5 நிலங்களான தாவா சொத்துக்களில் பிரதிவாதி எதுவும்

இடையூறு செய்யவில்லை என்றால் சரியல்ல. வருவாய்துறை வழங்கிய புலவரைபடத்தில் உள்ள சர்வே எண்.1562/6 க்கு மேல்புறத்தில் உள்ள தென்வடல் நீளம் 365 லிங்ஸ் ஆகவும், வா.சா.ஆ.4 ஆன புலவரைபடத்தில் வட்டாட்சியர் வழங்கிய தாவா சொத்திற்கு நீளம் 75.4 மீட்டர் ஆகவும் வழங்கப்பட்டுள்ளதால் எனக்கும், பிரதிவாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உள்ள பிரச்சனையை வருவாய்த்துறையினரை அழைத்து வருவாய் ஆவணங்களை ஆய்வு செய்தால் வழக்கின் உண்மைத்தன்மை தெரியவரும் என்றால் சரிதான். நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

Digitally signed by
G ASHOK PRASATH
**Principal District Munsif**
**Vedasandur**